**தலைப்பு 257 - களுத்துறை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேந்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்

### 1.6.1 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சுகாதார அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 233,750 ஆன கடன் மீதி 2019 ஆம் ஆண்டின் இறுதியில் திறைசேரியின்கணனி அச்சீட்டு குறிப்பீடுகளின் பிரகாரம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் மூலம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | இறுதி திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | இறுதி திறைசேரி அச்சீட்டு குறிப்புக்கள் கிடைக்காமையினால் கணக்குகளில் காண்பிக்க முடியாதுள்ளது. |

### 1.6.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் |

| | | |
|---|---|---|
| பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தில் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டு பேணிச்செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்பை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொண்டமைக்கான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டு வைக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் (2001) இன் கீழ் வருடாந்த பெறுகைகளாக ரூபா 20,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் கீழ் ரூபா 32,000,000 தொகையும் மேலதிக நிதியேற்பாடாக பெற்றுக் | செயற்திட்டத்தை உரிய முறையில் மதிப்பீடு செய்தல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல். | பழைய மாவட்ட அலுவலக உத்தியோகபூர்வ இல்லத்தினை புதுப்பிப்பதற்கு தேவையான அமைச்சரவை நிதியேற்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்திருந்த போதிலும், 2104 |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தது. இது மதிப்பீட்டுப் பெறுமதியில் 160 சதவீத அதிகரிப்பாகும். இதன் பிரகாரம் தேவைப்பாட்டினை இனங்காணாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | செலவின விடயத்தின் எஞ்சிய நிதியேற்பாடு காணப்பட்டமையினால் அது திறைசேரியின் பிரதி செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2001 செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டது. |
| (ஆ) | பசுமை சமூக (Green Club) செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்காக 2509 (ஏனைய) செலவின விடயத்தின் கீழ் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,700,000 தொகையான நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தினை ஆரம்பிக்காமையால் முழு நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | - மேற்படி - | இந்த செயற்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக மத்துகத மற்றும் புளத்சிங்கள பிரதேச செயலகங்களுக்கு நிதியேற்பாடுகள் கிடைத்துள்ள போதிலும், செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கலான நிலைமை காரணமாக செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. |
| (இ) | 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளின் 25 சதவீதம் கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மாவட்ட செயலகத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் 1 மற்றும் 2 இன் ஒட்டுமொத்த தேஙிய முலதன நிதியேற்பாடான ரூபா 246,700,000 தொகையில் சேமிக்கப்பட்டிருந்தது ரூபா 20,833,608 தொகை அல்லது 8.5 சதவீதம் மாத்திரமேயாகும். | 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | நிதியேற்பாடுகளின் சேமிப்புக்கள் முகாமைத்துவ அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு கடப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் மீண்டெழும் செலவின விடயங்கள் 6 நிதியேற்பாடுகளினை விஞ்சி ரூபா 883,016 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதியேற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்படக் கூடாது. | நிதியேற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களின் மூலம் ரூபா 6,911,987,912 ஆன நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள், ரூபா 5,506,433,680 அல்லது வழங்கிய நிதியேற்பாட்டில் 80 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. இரண்டு திணைக்களங்களிடமிருந்து ரூபா 1,145,750 ஆன முழுமையான நிதியேற்பாடு தொகையும் ஒரு அமைச்சிடமிருந்து நிதியேற்பாடுகளில் ரூபா 39,479,020 ஆன தொகையும் உள்ளடங்கலாக ரூபா 40,624,770 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மாவட்ட செயலகத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதியேற்பாடுகள் செயற்திறனாக பயன்படுத்தப்படல். | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 05/2019 இன் பிரகாரம் பணிகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை கைவிடல் |

## 2.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பிலான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,196,883 ஆகும். அந்த நிலுவை மீதிகள் 3 மாதங்கள் முதல் 5 வருடங்கள் வரையிலான காலங்கடந்திருந்த போதிலும், கடன் மீதிகளை அறவிடுவதிலான பின்தொடர்தல் பணிகள் நலிவான நிலையில் காணப்பட்டது. | இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் இடமிருந்து கடன் மீதிகள் தாபன விதிக்கோவையின் பிரகாரம் அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கும், மரணமடைந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டவாறு உள்ளன. ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை ஓய்வூதியத்திலிருந்தும் ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்தும் மற்றும் பணி வறிதாக்கப்பட்டுள்ள கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்யுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் மற்றும் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அறவிடப்படாத கடனுக்காக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 369 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கும் மற்றும் கடன் மீதிகளை பதிவழிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. |

**2.5 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2 வருடங்களைக் கடந்த ரூபா 184,364,618 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பாணந்துறை பிரதேச செயலக பிரிவின் மோதரவில விளையாட்டு அரங்கம் 2014 ஆம் ஆண்டு முதல் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரையிலும் ரூபா 3.70 மேற்பட்ட தொகை செலவிடப்பட்டுள்ள போதிலும் உரிய திட்டத்தின் பிரகாரம் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய திட்டமொன்றின் பிரகாரம் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளுக்காக திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான நிதியேற்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) கம்பெரலிய கிராம அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்திட்டங்களை இனங்காணும் போது 2018 யூலை 13 ஆந் திகதிய MNPED 05/2018 ஆம் இலக்க தேசிய | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க இனங்காணப்படும் செயற்திட்டங்களின் முன்னுரிமையின் பிரகாரம் அந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டியமை. | நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2018.11.09 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 03 ஆம் பிரிவின் ii மற்றும் iii இன் பிரகாரம் உடன்படிக்கை |

| | | |
|---|---|---|
| கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் 4(ஆ) பிரிவின் பிரகாரம் மக்களுக்கு உச்ச நலன் கிடைக்கும் வகையில் மாவட்ட செயலாளர்களினால் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும். எனினும், இங்கிரிய பிரதேச செயலகத்தின் 32 கிராம சேவகர் பிரிவுகளுக்கு முன்னுரிமை வழங்கிய 241 செயற்திட்டங்களுக்காக ஏனைய செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன. | | கைச்சாத்திடப்பட்ட எனினும், பணிகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் மற்றும் அடிப்படை பணிகள் எவையும் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களினை நடைமுறைப் படுத்தப்படுதல் நிறுத்தப்பட்டதன் அடிப்படையில் இங்கிரிய பிரதேச செயலகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 78 செயற்திட்டங்களில் 2018 ஆம் ஆண்டினுள் எவையும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

### 3.2 செயற்பணிகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பண்டாரகம றேருகான வயல் வெளிக்கு உள்நுழைவதற்கான விவசாய பாதையொன்றினை நிர்மாணிப்பதற்காக தக்ஷின லங்கா அதிவேக பாதை செயற்திட்டத்தின் மூலம் 2011 ஆகஸ்ட் 17 ஆந் திகதி ரூபா 931,950 வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் சுமார் 20 ஏக்கர் வயல் காணிகள் பல வருடங்களாக தரிசாக காணப்பட்டன. | தேவைப்பாட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் அல்லது செயற்படுத்த முடியாதெனில் பணத்தினை மீள அனுப்புதல். | சுமார் 17 பேர்ச் வயல் காணிகள் மீட்டப்படுகின்றமையால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாணந்துறை பிரதேச செயலகத்தின் கம்பெரலிய செயற்திட்டங்களுக்கு உரிய கொங்கிறீட் பாதையினை நிர்மாணிப்பின் தரத்தினை பரிசோதிப்பதற்காக அந்த வீதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கொங்கிறீட் அச்சுக் கற்கள் பௌதீக பரிசோதனைக்காக எடுத்துச் செல்லல் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும். 488 செயற்திட்டங்களின் அச்சுக் கற்களின் பரிசோதனைக்காக ரூபா 2,153,880 ஆன தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அச்சுக்கற்களின் மாதிரியினை பரிசோதிப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு இடமளிக்காது அரச உத்தியோகத்தர் களினால் மேற்கொள்ளல் மற்றும் அதற்காக ஒப்பந்த காரர்களுக்கு கொடுப்பனவுகளை செலுத்தாமை. | அச்சுக் கற்களின் பரிசோதனைக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டுள்ள மையால் பட்டியலில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் ஒப்பந்தக்காரர்களின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | இங்கிரிய, ஹொரன, பாணந்துறை பிரதேச செயலகங்களில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 475,599,835 கிரயமான கொங்கிறீட் வீதிகள் 946 இன் கொங்கிறீட் தட்டுக்களின் தடிப்பினை பரீட்சிப்பதற்கான நடைமுறையொன்று காணப்படவில்லை. | கொங்கறீட் தட்டின் தடிப்பினை அமைப்புக் குறிப்பீடுகளுடன் ஒப்பிட்டு அதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவினை மேற்கொள்ளல். | 2020 ஆம் ஆண்டு முதல் கொங்கிறீட் வீதி செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது கொங்கிறீட் தட்டின் தடிப்பினை பரீட்சிப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரினால் உயர் தரத்திலான வீதிகளை நிர்மாணிக்க வேண்டிய போதிலும், இரு பிரதேச செயலாளர் பிரிவுகளினால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 7,954,337 கிரயமான 08 வீதிகளின் நிர்மாணங்கள் குறுங்காலத்தினுள் வெடிப்புக்குள்ளாகியமை, தாழிறங்கியமை மற்றும் தாரிடப்படாது நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதிகள் பழுதடைந்தமை பௌதீக பரிசோதனைகளின் போது காணக்கூடியதாக காணப்பட்டது. | நிர்மாணங்கள் உயர் தரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப் படுகின்றமையை உரிய கண்காணிப்பிற்கு உட்படுத்துதல். | இந்த வீதிகளினை பரிசோதித்து பார்த்து வெடிப்புக்களை திருத்தி அமைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | இங்கிரிய பிரதேச செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 3,419,127 கிரயமான 6 வீதிகளின் முதற்பாகம் மற்றும் இறுதிப் பாகம் நிர்மாணிக்கப்படாது நடுப் பகுதி மட்டும் நிர்மாணிக்கப்பட்டு இருந்தமையால் வீதியின் நிர்மாணம் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | வீதியொன்றின் ஒரு பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்படாது முழுமையாக நிர்மாணிக்கப்படுதல். | நிதியேற்பாடுகள் கிடைத்த பிரகாரம் அத்தியாவசியமான பகுதி மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டமை. |

## 3.4 செயற்திட்டத்தினை நிறைவேற்றப்படாது கைவிடப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பண்டாரகம பிரதேச செயலக அனுமதிப்பத்திரத்தினுள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட துறைகளின் உத்தியோகத்தர்களுக்கு | நிதியேற்பாடுகளை பெற்று பணிகளை பூர்த்தி செய்தல். | நிதியேற்பாடுகள் இல்லாதிருந்தமையால் முழுமையாக நிறைவு செய்யப்பட முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | வசிதியுடனான அலுவலகமொன்றினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 10,750,000 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 4 பல்நோக்கு கட்டிடங்கள், 05 சேவை நிலையங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தல கட்டிடமொன்றும் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | களுத்துறை பிரதேச செயலகத்திற்காக புதிய 05 மாடிக் கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 108.48 மில்லியனான செயற்திட்டம் 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 மே 20 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் ரூபா 42.9 மில்லியனான 22.5 சதவீதமான பணிகள் நிறைவு செய்யப்பட்டு இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது சாத்தியவள கற்கையினை மேற்கொள்ளல், ஒப்பந்தக் கையளிப்பின் போது ஒப்பந்தக்காரர் தொடர்பில் பொருத்தமான மதிப்பீடொன்றினை மேற்கொள்ளல், செயலாற்றல் பிணையினை காசாக மாற்றிக் கொள்ளுதல். | ஒப்பந்த நிறுவனத்தின் நிதி இடர்காரணமாக ஒப்பந்த பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், மீண்டும் கூறுவிலைகள் கோருவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவர்று உள்ளன. |
| (இ) | மத்துகம கலாச்சார நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 18,529,124 தொகையான வரியற்ற தொகைக்கு ஒப்பந்த நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 60 சதவீதமான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு 84 சதவீத கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போது நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் சாத்திய வள கற்கையொன்றினை மேற்கொள்ளல் மற்றும் இடம்பெற்றுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மற்றும் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | NPRO நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக பணிகள் காரணமாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமையினால் குறித்த ஒப்பந்ததாரர் தற்போது நிர்மாணங்களை நிறுத்தியுள்ளார். |

**3.5 செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பேருவளை பிரதேச செயலகத்தின் முன்கேன சங்கமித்தா நீர் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 2,341,259 தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வீதி பழுதடைந்தமை போன்ற பௌதீக நட்டங்களின்காரணமாக மேல் மாகாணத்தினை அண்மிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,941,970 தொகையினை செலுத்தாமையினால் 2020 யூன் 10 ஆந் திகதி வரையிலும் குறித்த செயற்திட்டத்தினை ஆரம்பிக்க முடியாதுள்ளது. | மாகாணத்தை அண்மிய வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தி செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய பணத்தின் எஞ்சிய ரூபா 630,500 தொகையினை மீள பெற்றுக்கொள்ளல். | மாகாணத்தை அண்மித்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டியுள்ள ரூபா 1,941,970 தொகையான நிதியேற்பாடுகள் கிடைக்காமையால் 2018 ஆம் ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 1,710,759 தொகையினை மீள பிரதேச செயலகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பாணந்துற பிரதேச செயலகப் பிரிவின் கொரக்கான விளையாட்டுத் திடலினை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 7,524,970 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பராமரிப்பு பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையால், மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகள் சேதமடைந்தவாறு காணப்பட்டன. | விளையாட்டுத் திடலினை பயன்பாட்டிற்கு எடுக்க கூடிய விதத்தில் திருத்தியமைத்து பராமரித்துச் செல்ல நடவடிக்கை எடுத்தல். | பராமரிப்பு பணிகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவற்றை உரிய முறையில் பராமரிக்கும் பணிகளை நடாத்திச் செல்வதற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.6 பெறுகைகள்**

--------------------

(அ) பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவின் 47 பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 2,653,885 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒலிப்பெருக்கி இயந்திரம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2 (இ) இன் பிரகாரம் ஒலிபெருக்கிகளை கொள்வனவு செய்வது தொடர்பில் அமைப்புக் குறிப்பீடுகள் மற்றும் விலைக் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கூறுவிலை கோருவதற்கு முன்னர் அமைப்புக் குறிப்பீடுகள் மற்றும் விலைக் கேள்வி ஆவணங்கள் (Bidding Documents) தயாரித்தல். | ஒலிபெருக்கிகளுக்கான அமைப்புக் குறிப்பீடுகள் குறிப்பிடப்பட்டு கூறுவிலைகள் கோரல் இடம்பெற்றுள்ளது. |
| (ii) 2019 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒலிப்பெருக்கிகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி கட்டளையிடப்பட்டு 2020 சனவரி 23 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. ஒலிப்பெருக்கிகளை கொள்வனவு செய்யும் செலவினம் 2019 ஆம் ஆண்டிற்கான செலவினமாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதியினுள் பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு பொருட்களை பெற்றுக் கொள்ளல். | செயற்திட்டத்தினை நிறைவு செய்யப்பட வேண்டிய திகதியான 2019/12/31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019/12/31 இறுதி ஆண்டினுள் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நிதியேற்பாடுகள் இல்லாதிருந்தமையால் 2019 ஆம் ஆண்டின் பட்டியல்களாக குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (iii) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.5.1(ஆ), 2.6.1(அ)(i) மற்றும் 4.1.1(அ) இன் பிரகாரம் ஒலிப்பெருக்கிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது |
| (iv) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் ரூபா 2,653,885 பெறுமதியான ஒலிபெருக்கிகளை கொள்வனவு | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கொவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட தனியார் கம்பனியுடன் முறையான ஒப்பந்த முறைமையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | ஏற்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது |
| (v) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒலிபெருக்கிகளை கொள்வனவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் போது கிடைத்த மூன்று கூறு விலைகளில் 02 தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படாது அகற்றப்பட்டு எஞ்சிய விலைக்கேள்வி மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டமையின் அடிப்படையில் பெறுகைகள் குழுவினால் தனியார் கம்பனியொன்றிடமிருந்து ஒலிபெருக்கிகளை கொள்வனவு செய்தல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஆக்கபூர்வமான போட்டித் தன்மையொன்று இல்லாதிருந்தமை தெளிவாக காணக்கூடியதாக உள்ள போது கிடைத்துள்ள விலைக்கேள்வியினை நிராகரித்து மீள விலைக் கேள்வி கோரப்படல். | தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் கூறு விலைகள் மற்றும் பொருட்களின் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மதிப்பீட்டு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும் அதனை கருத்திற் கொண்டு கொள்வனவு செய்தல் தீர்மானிக்கப்பட்டது என்பது. |
| (ஆ) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் எழுத்துமூல உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ளாது 2019 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பண்டாரகம பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 1,691,000 பெறுமதியான 04 செயற்திட்டங்களுக்காக உப ஒப்பந்தம் வழங்கப்படக் கூடாதென எனும் எழுத்து மூல சான்றுப்படுத்தலுடன் பண்டாரகம பிரதேச செயலகத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் பிரதேச செயலகத்தினால் உப ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் மற்றும் உப ஒப்பந்தம் வழங்கப்படக்கூடாத ஒப்பந்தங்களை அவ்வாறு உப ஒப்பந்தங்களை வழங்காதிருத்தல். | உடன்படிக்கை கைச்சாத்திடும் போது உப ஒப்பந்தம் வழங்கப்படக்கூடாது எனும் எழுத்துமூல சான்று ஒன்று பெறுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. |

(இ) வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் புளத்சிங்கள கலாச்சார நிலையத்தினை நிர்மாணித்தல் தொடர்பிலான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுவதற்காக 21 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், 14 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலம் வரையறைக்குட் பட்டிருந்தமையால் வரையறுக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் கோரப்பட்டமையின் கீழ் தகைமையின் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த நிறுவனங்கள் 10 இடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டு 14 நாட்களில் நிறைவு செய்யப்பட்டது. |
| (ii) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்கபூர்வமான போட்டித் தன்மையொன்று கண்கூடாக புலப்படும் போது கூறுவிலைகள் மீள கோரப்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாத போது கிடைத்திருந்த ஒரேயொரு கூறுவிலை பொறியியல் மதிப்பீட்டினை விட அதிகமான போதிலும், பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு கூறுவிலை மாத்திரம் கிடைத்திருந்த போதிலும், மீள கூறுவிலை கோருவதற்கு போதியளவு காலம் இல்லாதிருந்தமையால் அரசின் மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தத்தினை குறித்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் மாவட்ட செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் புளத்சிங்கள மற்றும் பாலிதநுவர ஆகிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களினுள் ரூபா 42,479,672 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கலாசச்சார நிலையங்கள் இரண்டு இதுவரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்து நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு போதியளவிலான நிதியேற்பாடு இல்லாதிருந்தமையின் அடிப்படையில் கட்டிடத்தினை பயன்படுத்த முடியாதுள்ளது. |
| (ஆ) | பாணந்துறை மற்றும் பண்டாரகம பிரதேச செயலக அதிகார பிரிவுகளுக்குள் கள உத்தியோகத்தர்களுக்கு வசதிகளுடனான அலுவலகத்தினை வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 14,334,381 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 பல்நோக்கு கட்டிடங்கள் மற்றும் 03 சேவை நிலையங்கள் 2020 யூன் 10 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கட்டிடங்களின் உரித்தினை பெற்றுக் கொள்ளுதல் பணிகளை துரிதமாக நிறைவு செய்தல் மற்றும் அலுவலகத்தினை ஆரம்பித்தல், உரித்தற்ற காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிக்காமை. | பண்டாரகம பிரதேச செயலக அதிகார எல்லையினுள் நிர்மாணிக்கப்பட்ட அலுவலகங்களில் அலுவலக்கினை நடாத்திச் செல்வதற்கு இடமளிப்பதாக பிரதேச சபையிடம் இடமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் நிதியேற்பாடுகள் இல்லாதிருந்தமையின் காரணமாக பணிகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | களுத்துறை பழைய மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இல்லம் 2017-2018 காலப்பகுதியினுள் ரூபா 37,548,501 செலவிடப்பட்டு சுற்றுலா விடுதியொன்றாக நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டினுள் 04 நாட்கள் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ சுற்றுலா விடுதிகளாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | களுத்துறை பழைய மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இல்லம் 2020 ஆம் ஆண்டில் சுற்றுலா விடுதியாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 மார்ச் 15 ஆந் திகதி முதல் யூன் 30 ஆந்திகதி வரையிலும் வழங்குதல் நிறுத்தப்பட்டு 2020 யூலை 20 ஆந் திகதி மீள வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | பண்டாரகம பிரதேச செயலகத்தினால் 61/A கொத்தலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் பிரதேச சபைக்குரிய காணியில் சேவை நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் ரூபா 3,729,024 செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்குரிய காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | கள உத்தியோகத்தர் களுக்கு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

**3.8 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| --- | --- | --- |
| (அ) மாவட்ட செயலகம் மற்றும் மூன்று பிரதேச செயலகங்களின் ரூபா 1,961,288 ஆன நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பில் உரிய பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுத்தல். | புத்தகங்களிடமிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மாவட்ட செயலகத்தின் அலுவலகத்தில் இலக்கம் 252-9804 ஆம் இலக்க கெப் வண்டி 2017 யூன் 15 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி பழுதுபார்ப்பதற்காக ரூபா 159,100 செலவிடப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகள் இடம்பபெற்றிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | வாகன விபத்து மூலம் ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்காக பொலிசினால் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் கடமை தேவையின் பிரகாரம் வாகனம் பழுதுபார்க்கப்பட்டது. விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| --- | --- | --- |
| களுத்துறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 2893 கிராமிய வீதிகளில் 04x2.5 அடி அளவிலான பெயர்ப்பலகைகளை பொருத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 17,358,000 செலவிடப்பட்டிருந்தது. | ஆக்கபூர்வமற்ற பணிகளுக்கு பணத்தினை செலவிடாமை. | தற்போது மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக பெயர்ப்பலகையினை காட்சிப்படுத்திருக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது களுத்துறை மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகங்களின் 735 செயற்திட்டங்களினை மேற்பார்வை செய்வதற்காக ரூபா 4,402,966 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகளுக்காக அளவிடைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளுதல், வேலைத்தளத்திற்கு கொண்டுவரப்பட்ட மூலப்பொருட்களின் அளவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற பணிகள் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவர்களினால் அந்த பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதை கண்டறிந்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நடைமுறையொன்றினை உருவாக்குதல். | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அதிக வேலைப் பளுவுக்கு மாற்றீடாக பௌதீக பணிகளை கண்காணித்தல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் கண்காணிப்பு அறிவுரைகளின் கீழ் பிரிவுக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அந்த பணிப்பொறுப்பிலிருந்து விலகி செயற்படுவதற்கோ அல்லது ஏனைய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | நிர்மாண செயற்திட்டத்தினை ஆரம்பம் முதல் இறுதி வரையிலும் கண்காணித்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளமையால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பில் போதியளவான அறிவு இல்லாதிருந்தமையால் பயன்படுத்த வேண்டிய மூலப் பொருட்களின் தேவைப்பாடு மற்றும் தளத்திற்கு கொண்டுவரப்பட்ட மூலப்பொருட்களின் அளவுகள் தொடர்பிலான அறிவு அவர்களிடம் காணப்படவில்லை. | பொருத்தமான தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு கண்காணிப்பு பணிகளை ஒப்படைத்தல். | இந்த பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் கூடிய கவனம் செலுத்தப்படும். அத்துடன் உரிய பணிகள் தொடர்பில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துவதற்கு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுரை வழங்க குறித்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.11 மோசடித்தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| பேருவள பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரின் கடமை நேரத்தினுள் களுத்துறை நாகொட தனியார் நிறுவனமொன்றில் இயந்திர இயக்குனராக சேவையாற்றியிருந்தார். இயந்திர இயக்குனராக சம்பளம் பெற்றுக்கொண்ட 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரையிலான காலத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் கடமைகளுக்காக மேற்கொள்வதற்காகவும் பிரதேச செயலகத்திலிருந்து சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,391,921 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முறையான விசாரணை யொன்றினை மேற்கொண்டு அந்த அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒருங்கிணைந்த சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் DP/6/24/2019 ஆம் இலக்க மற்றும் 2019 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த உத்தியோகத்தரின் பணி வறிதாக்கப் பட்டுள்ளதுடன் குறித்த உத்தியோகத்தரை கண்காணிப்பதற்காக திட்டமொன்று உதவி பணிப்பாளருக்கு சாட்டப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மாவட்ட செயலக அலுவலகத்தில் தாபிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலகின் ஊடாக கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் பதில்கள் ஆகியவற்றை வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் நிலைமையின் கீழ் அதன் சுயாதீனத்துவம் தொடர்பில் தடைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 134(1) இன் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள உள்ளளக் கணக்காய்வு அலகின் சுயாதீனத்துவத்தை சான்றுப்படுத்துதல். | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சுயாதீனத்துவத்தினை சான்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ஹொரண பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பதவியும், 4 பிரதேச செயலகங்களின் உதவி பிரதேச செயலாளர் பதவியும் வெற்றிமாகக் காணப்பட்டன. | அத்தியாவசியமான வெற்றிடங்களை துரிதமாக நிரப்புதல். | அங்கீகரிக்கப்பட்ட, தற்போதுள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகை ஊழியர் தகவல்கள் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் அமைச்சிற்கு அறிவிக்கப்படுகின்றது. |
| (ஆ) மாவட்ட செயலகத்தின் பிரதி பணிப்பாளர் திட்டமிடல் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டுள்ள போதிலும், களுத்துறை, பாணந்துறை மற்றும் பண்டாரகம ஆகிய பிரதேச செயலகங்களின் 03 பிரதி பணிப்பாளர் திட்டமிடல் பதவிகளில் மிகையொன்று அவதானிக்கப்பட்டது. | வெற்றிடமாக உள்ள பதவிகளை துரிதமாக நிரப்புதல் மற்றும் மிகை உத்தியோகத்தர்களை வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு இடமாற்றம் செய்தல். | - மேற்படி - |
| (இ) களுத்துறை மாவட்ட செயலகத்தின் 05 முதல் 14 வருடங்கள் வரையிலான சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி துறையின் 09 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றிருக்கவில்லை. | கால அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டும். | கொள்கைத் திட்டமிடல் செயலகத்தின் உள்ளக பணிகளுக்களில் தடை ஏற்படாத விதத்தில் கிரமமான முறையில் படிப்படியாக உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. |